[2014 ஆகஸ்ட் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில், வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மொத்தம் 94,58,161 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். அதில், தருமபுரி மாவட்டத்திலே மட்டும் 2,12,930 பேர் பதிவு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டும் தருமபுரியில் 31,471 பேர் பதிவு செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்கள் 23-7-2014-ல் 5 புதிய வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு ஆணையிட்டிருக்கிறார்கள். அதிலே, தருமபுரி மாவட்டத்திற்கும் ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகள் சிறப்போடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 348, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

348—

மகளிர் விடுதிகள்

***22527—திரு. சோழன் சித. பழனிச்சாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதி, காரைக்குடி மற்றும் தேவக்கோட்டையில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 *ஆகஸ்ட்* 6]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால், சமூக நலத் துறையின்கீழ், சென்னையில் 2, கடலூரில் 1, புதுக்கோட்டையில் 1, மதுரையில் 1, திருச்சியில் 1, தருமபுரியில் 1, தூத்துக்குடியில் 1 என 7 மாவட்டங்களில் ஏற்கெனவே 8 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், மகளிர் நலனில் அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 13 மாவட்டங்களில் புதிதாக 20 அரசு பணிபுரியும் மகளிர் விடுதிகள் தொடங்க ஆணையிட்டதின் பேரில், 25-6-2014 அன்று காணொளிக் காட்சிமூலம் 12 பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதிகள், மாண்புமிகு அம்மா அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கப்பட்டன. இதில் சிவகங்கை மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ள விடுதியும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலர்ந்து பயன்தரும் மலரைப் போன்று, புலர்ந்து பயன்தரும் கதிரைப் போன்று, பொழிந்து பயன்தரும் மழையைப் போன்று, கலந்து பயன்தரும் தேனைப் போன்று, பழகிப் பயன்தரும் நட்பைப் போன்று, பாய்ந்து பயன்தரும் நதியைப் போன்று, பாடிப் பயன்பெறும் நாவைப் போன்று, நாடிப் பயன்தரும் நூலைப் போன்று, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய உள் துறை மானியக் கோரிக்கையினை உளமகிழ்ந்து ஏற்கிறது இப்பேரவை. மாண்புமிகு அம்மா அவர்களின் காவல் துறை மானியக் கோரிக்கையினை கடமை உணர்வோடு நிறைவேற்றுகிறது இம்மாமன்ற அவை என்று கூறியும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வங்கக் கடல் போல் வெற்றிகள் குவியட்டும்; சங்கப் பலகைபோல் நீதி வளரட்டும்; தங்கத் தலைவியின் ஆட்சியில் தமிழகம் பலம் காணட்டும் என்று கூறியும், என் மனமொத்த மலர்க் கொத்தினை மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரைக்குடி தொகுதி இரண்டு நகராட்சிகளை உள்ளடக்கியத் தொகுதியாகும். அந்தப் பகுதிகளில் மகளிருக்கென்று விடுதிகள் வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடப்பாண்டிலே தொடங்கப்பட்டிருக்கின்ற விடுதிகளிலே, அந்த விடுதியும் சேர்ந்திருக்கிறது என்று இங்கே கூறியதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணிபுரியும் மகளிருக்கான அரசு விடுதி கேட்டிருக்கின்ற இடம் காரைக்குடி. காரைக்குடிக்கும், தேவக்கோட்டைக்கும் இடைப்பட்ட தூரம் வெறும் 20 கிலோ மீட்டர்தான் ஆகும். இந்த நிலையிலே, சிவகங்கையை உள்ளடக்கி, சிவகங்கை தலைநகரில் அனைவரும் பயன்பெறும் வகையிலே, பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதன்படி தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே பணிபுரியக்கூடிய மகளிரின் எண்ணிக்கை அதிகமாக இருந்து, தேவை இருப்பின், அவர் கேட்டிருக்கக்கூடிய காரைக்குடி தொகுதியிலே பணிபுரியும் மகளிர் விடுதி கட்டுவதற்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சோழன் சித. பழனிச்சாமி அவர்கள்.*

திரு. சோழன் சித. பழனிச்சாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, சிவகங்கையிலே அமைத்தால், காரைக்குடியிலிருந்து சிவகங்கைக்குச் செல்வதற்கு 60 கிலோ மீட்டர் பயணிக்க வேண்டியிருக்கும். ஆகவே, சிவகங்கை என்பது காரைக்குடியிலிருந்து 60 கிலோ மீட்டர் தொலைவிலே இருக்கின்ற காரணத்தினாலும், காரைக்குடி, அழகப்பா பல்கலைக்கழகம், பொறியியல் மற்றும் இதர 9 கல்லூரிகளை உள்ளடக்கிய பகுதியாக, கல்வி நகரமாகத்*

2014 ஆகஸ்ட் 6]

திகழக்கூடிய காரணத்தினாலும், காரைக்குடியில் ஒரு மகளிர் விடுதி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே என்னுடைய பதிலிலே சொல்லியிருக்கின்றேன். அந்தப் பகுதியிலே கல்லூரியில் படிப்பவர்கள் மற்றும் பணிபுரியக்கூடிய மகளிர் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த விடுதி பணிபுரியக்கூடிய பெண்களுக்கான மகளிர் விடுதியாகும். ஆகவே, அங்கே பணிபுரியக்கூடிய மகளிருக்கு இதுபோன்ற விடுதியின் தேவை அதிகமாக இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்டறிந்து, கோரிக்கையினைப் பெற்றுத் தெரிவிப்பாரேயானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 349, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

349—

புதிய நியாய விலைக் கடை

***8786—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், எர்ணாபுரம் சந்தைப்பேட்டை பகுதியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?